1974 மார்ச் 26]

பம்பிங் ஸ்டேஷன் அமைய வேண்டும், அங்கிருந்து தண்ணீரைக் கொண்டு சேர்க்கக்கூடிய இடம் அமைய வேண்டும், அவை எல்லாம் முடிகிற நேரத்தில் இந்தத் திட்டம் செயல்பட ஆரம்பிக்கும்.

நெல் பயிரிடல்.

615* **வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்சமயம் தமிழ் நாட்டில் எத்தனை வகையான நெல் பயிரிடப்படுகிறது?

(இ) அதில் காலத்தில் எத்தனை வகை நெல் பயிரிடலாம்?

(உ) கோடையில் எத்தனை வகை நெல் பயிரிடலாம்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ), (இ) & (உ) விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்த விவர அறிக்கையில் நான்கைந்து ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கிற நெல் வகைகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு புதிய நெல்வகை ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 எல்லாம் வருடம் முழுவதும் சாகுபடி செய்யக் கூடியவையாக இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஐ.ஆர். 8 மழை காலத்தில் பலன் தராது. ஐ.ஆர். 20 மழை காலத்தில்தான் பலன் தரும். இது அனுபவம் இதுபற்றி என்ன கருத்துத் தெரிவிக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த ஆண்டு இரண்டொரு புது ரக நெல் விதைகள் கண்டுபிடிக்கப்பட்டு வெளியிடுவதாக இருக்கிறது. ஐ.ஆர். 8 தண்ணீர் குறைவாக இருக்கிற நிலையில்தான் நன்றாக வளரும். என்றாலும் எல்லா இடங்களிலும் பயிரிட முடியும்.

திரு. தி. பொன்னுமலை : கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் எந்தப் பயிர் எந்த மாதத்தில் வைக்க வேண்டும், நாற்றங்காலுக்கு எவ்வளவு நாள், எந்தந்த நேரத்தில் என்ன

@ 353-356-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

உரம் போட வேண்டும் என்கிற விவரங்கள் பூராவும் இல்லை. அவற்றை எல்லாம் தொகுத்து புத்தகமாகவே போட்டு, வேளாண்மைப் பணியில் ஈடுபட்டிருப்போருக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எப்போது எந்தப் பட்டத்தில் எந்தப் பயிரை வைக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. மற்ற விஷயங்கள் எதையும் குறிப்பாக உறுப்பினர் கேட்டால், நான் மனப்பாடமாகவே சொல்ல முடியும்.

திரு. சோ. அழகர்சாமி : இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள நெல் விதைகளுக்கு எல்லாம் அதிகமான ரசாயன உரம், அதிகமான தண்ணீர் தேவைப்படுகிறது. ரசாயன உரம், தண்ணீர் குறைவாக பயன்படுத்தினால் போதும் என்கிற விதை ரகங்களை கண்டுபிடிக்க முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நெல் விளைச்சல் அதிகமாக வேண்டுமென்றால், 70 கிலோ நைட்ரஜன் உரம் போட்டாக வேண்டும். தண்ணீர் 40 இஞ்சு இருந்தால் போதும், அதைச் சொட்டு சொட்டாக எப்படி அளந்து பாய்ச்சுவது. இன்றைக்குத் தண்ணீரைக் கால்வாய் வழியாகப் பாய்ச்சக்கூடிய தஞ்சை மாவட்டத்தில் 70 இஞ்சு வரை பாய்ச்சுகிறார்கள். இது சற்று அதிகம் என்று சொல்கிறார்கள். நல்ல விளைச்சல் வேண்டுமென்றால் 70 கிலோ நைட்ரஜன் உரம் தேவை.

திரு. சி. ஆறுமுகம் : சம்பா, சிறுமணி போன்ற ரகங்களில் கிடைக்கும் வைக்கோல் ஐ.ஆர். 8-இல் கிடைப்பதில்லை. வைக்கோல் உற்பத்திக்கு என்ன திட்டம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஐ.ஆர். 8, கரிகாலன், கருணா போன்ற ட்வார்ப் குள்ள வகைகளில் வைக்கோல் குறைவாகத்தான் இருக்கும். வைக்கோல் அதிகம் வேண்டுமென்றால் ஐ.ஆர். 20 போடலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கக் கூடிய விதைகள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உகந்ததாக இல்லை. கன்னியாகுமரி க்ளைமாடிற்கு ஒத்தாக புது ரக விதைகள் கண்டுபிடிக்க முடியுமா ?

1974 மார்ச் 26]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: வேளாண்மைத்துறை மானியத்தில் இதுபற்றி கூறப்பட்டவுடனேயே, நான் கன்னியா குமரி மாவட்டத்திற்கு ஏற்ற ஹையஸ்ட் யீல்டிங் வெரைடி என்ன என்று கேட்டேன். ஏ. எஸ். டி. 1 முதல் 14 ரகங்கள் விளைவிக்கலாம் என்று சொன்னார்கள். மேலும் இதுபற்றி ஆராயச் சொல்லியிருக்கிறேன். விவரம் தெரிந்தவுடன் அறிவிக்கிறேன்.

திரு. ஏ. எம் இராஜா: வருடம் முழுவதும் பயிரிடக்கூடிய ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20, ஜெயா, பாலா போன்றவற்றுக்கு எல்லாம் நைட்ரஜன் 75 கிலோ தேவைப்படும். ஆனால் பவானிக்கு 50 கிலோ இருந்தால் போதும். குறைந்த ரசாயன உரத்தைக் கொண்டு பயிரிடக்கூடிய பவானிக்கு ஸ்பெஷல் ஊக்கம் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: எந்தனை டன் ஒரு ஏக்கருக்கு அதிகம் உற்பத்திசெய்ய முடியும் என்பதைப் பொறுத்திருக்கிறது நைட்ரஜன் உரம் கொடுப்பது. 50 கிலோவுக்கு ஒன்றேமுக்கால் டன் விளைச்சல் கிடைக்கும். அதிக விளைச்சல் வேண்டுமென்றால் அதிக உரம் கொடுக்க வேண்டும்.

*** 616 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் ஒருபோகச் சாகு படியிலிருந்து இருபோகச் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்ட நிலங்கள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 2,65,600 ஏக்கர்கள்.

*** 617. வினா—திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அதிகமாக நெல் விளைச்சல் செய்யும் விவசாயிகளுக்குப் பரிசு வழங்கும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கிராம, வட்டார, மாவட்ட, மாநில அளவுகளில், ஆண்டுதோறும், நெல் விளைச்சல் போட்டிகள் நடைபெறுகின்றன. பரிசுகளும், "வேளாண்மைச் செம்மல்" என்ற பட்டமும் வழங்கப்படுகின்றது.